بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

"எதிரிகள் பகைமையில் வளர்கிறார்கள். பொறாமையில் வளர்கிறார்கள். ஆனால் இறைவனின் தக்தீர் முழுமை அடையாமல் இருப்பதில்லை. எதிரிகளின் பொறாமைப் பார்வை இருந்த போதிலும் இறைவன் தனது ஜமாஅத்தை வளர்த்துக் கொண்டே செல்கிறான். அதற்கு உலகில் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே செல்கிறான். இது நமது மகிழ்ச்சிக்குக் காரணமானது என்பதில் ஐயமில்லை. அத்துடன் இது நம்மை நமது பொறுப்புகளின் பக்கமும் கவனமூட்டுகிறது. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த அந்த நோக்கத்தின் பக்கம் நம்மை கவனமூட்டுகிறது."

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 25.12.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இந்நாள் காதியானின் ஆண்டு மாநாட்டின் நாளாகும். நாளையிலிருந்து காதியானின் ஆண்டு மாநாடு தொடங்குகிறது இன்ஷா அல்லாஹ். காதியானின் ஆண்டு மாநாட்டிற்கு இந்த அடிப்படையிலும் முக்கியத்துவம் உண்டு. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஊராகும். இங்கு தான் அன்னார் அல்லாஹ்விடமிருந்து கட்டளையைப் பெற்று மாநாட்டைத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தனது பல்வேறு உரைகள் மற்றும் குத்பாக்களில் ஆண்டு மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலமான ஜமாஅத்தின் ஆரம்ப காலத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். தொடக்ககால மாநாட்டைப் பற்றி குறிப்பிட்டவாறு அன்னார் தனது குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட தாக்கம் மற்றும் அப்போதைய ஜமாஅத்தின் நிலையைப் பற்றி குறிப்பிட்டவறு ஒரு மாநாட்டில் கூறுகிறார்கள். 1936 –ல் ஆரம்பகால நிகழ்ச்சிகளைப் பற்றி கூறுகிறார்கள். அப்போது எனக்கு 7–8 வயது இருக்கும். ஒருவேளை எனது நினைவில் குறைவும் ஏற்பட்டிருக்கலாம். விரிப்பு ஒன்றல்ல; இரண்டாக இருந்திருக்கலாம். ஆனால் எனக்கு நினைவில் இருந்தவரை ஒரேயொரு விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. ஒரு விரிப்பில் சிலர் அமர்ந்திருந்தனர். 150 அல்லது 200 பேர் இருப்பார்கள். சிறு குழந்தைகளையும் சேர்த்து 250 பேர் என்ற பட்டியலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வெளியிடவும் செய்தார்கள். ஒரு விரிப்போ அல்லது இரண்டு விரிப்புகளோ இருக்கலாம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கும், இன்னோரிடத்திலிருந்து மற்றுமோர் இடத்திற்கும் மாற்றப்பட்டது. முதலில் ஒரிடத்தில் விரிக்கப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு அங்கிருந்து எடுத்து சற்று தூரத்தில் விரிக்கப்பட்டது. சிறிது நேரம் கழித்து அங்கிருந்து மாற்றி வேறோர் இடத்தில் விரிக்கப்பட்டது. பிறகு மூன்றாவது முறையில் அவ்விடத்திலிருந்து எடுத்து இன்னும் தூரத்தில் விரிக்கப்பட்டது. இன்று காதியானில் மக்கள் மாநாட்டிற்காகச் சென்றுள்ளார்கள். அவர்களால் ஒருவேளை அக்காலத்தை அனுமானிக்க இயலாமல் போகலாம். இப்போது ஒரு பரந்த மாநாட்டுத்திடல் அல்லாஹ்வின் அருளால் கிடைத்துள்ளது. உறுதியான நான்கு சுவர்களால் சூழப்பட்டுள்ளது. அதிலும் கூட அதிகமாக வசதிகள் செய்து தர முயற்சி செய்யப்படுகிறது.

1936 –ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அதற்கு பிறகு நாடு பிரிவினையாகும் வரை ஏற்பாடுகள் இன்னும் விரிவடைந்தன. காதியானில் பிறகு எத்தகைய ஒரு சூழல் ஏற்பட்டது எனில், தாருல் மஸீஹ் மற்றும் அதனைச் சுற்றி சில வீடுகள் வரை மட்டும் அஹ்மதிகள் எல்லைக்குட்பட்டு விட்டனர். சில நூறு பேரைத் தவிர மற்ற எல்லாரும் ஹிஜ்ரத் செய்ய நேர்ந்தது. அஹ்மதிகள் ஒரு சிலரும் பலவீனமானவர்களாக இருந்தனர். ஆனால் இன்று அல்லாஹ்வின் அருளால் விரிவாக்கம் ஏற்பட்டு வருகிறது. அங்கு செல்பவர்கள் அதனைப் பார்க்கின்றனர். முதன் முதலில் போகிற புதிய தலைமுறைகள், இளைஞர்கள் அல்லது வெளிநாட்டிலிருந்து வரும் மக்கள் இதனைப் பார்க்கின்றனர். வரலாற்றின் அடிப்படையில் இன்று ரப்வாவில் வாழ்பவர்கள் இந்நாட்களில் நிம்மதியின்மைக்கு உள்ளாகலாம். அவர்களும் நினைவில் கொள்ள வேண்டும். சூழ்நிலை எப்போதும் ஒன்றுபோல் இருக்காது. இன்ஷா அல்லாஹ் அங்கும் நிலைமைகள் மாறும். பொலிவுகள் மீண்டும் நிலைபெறும். ஆனால் ரப்வாவில் வாழ்வோர் துஆவில் கவனம் செலுத்த வேண்டும். பாகிஸ்தானில் வாழ்வோர் சிறப்பாக துஆவில் கவனம் செலுத்த வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் தளர்ச்சி அடையாதீர்கள். துயரமும் அடையாதீர்கள். நீங்கள் நம்பிக்கையாளர்களாக இருப்பின் நீங்களே மேன்மையை அடைவீர்கள். (3:140) ஆக, நீங்கள் முஃமீன்களாக இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்படுகிறது. ஈமானிம் மிகுதி மற்றும் துஆவில் அழுத்தம் தான் அல்லாஹ்வின் அருளை ஈர்த்தவாறு நிலைமைகளை மாற்றுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 125 அல்லது 130 கோடி பேர் கொண்ட இவ்வுலகில் அக்கால மக்கள் தொகையைக் குறிப்பிடுகிறார்கள். 200 அல்லது 250 பேர் அவர்களும் பெரும்பாலார் ஏழைகளாக இருந்தனர். அவர்களுள் மிகக் குறைந்த மக்களே அன்றைய இந்தியாவின் நிலைமைக்கேற்ப நடுத்தர மக்கள் என்று கூறக்கூடிய அம்மக்கள் அங்கு ஒன்றுகூடியிருந்தனர். முஹம்மது (ஸல்) அவர்களுடைய கொடியை எதிரிகள் வீழ்த்தி விட முயற்சி செய்கிறார்கள். அவர்களை வீழ்த்த விடக் கூடாது. மாறாக, அதனைப் பிடித்து சரியாக நிறுத்த வேண்டும். அதற்காக தம்மை மாய்த்துக் கொண்டாலும் அதனை வீழ விடக்கூடாது என்று 125 கோடி பேர் கொண்ட கடலுக்கு முன்னால் 200–250 பேர் தமது தியாகத்தை எடுத்து

வைக்க 1895 –ல் வந்திருந்தார்கள். பத்ர் சஹாபாக்களின் முகங்களில் எழுதப்பட்டதே அவர்களின் முகங்களிலும் எழுதப்பட்டிருந்தது. பத்ர் சஹாபாக்கள் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே! சந்தேகமின்றி நாங்கள் பலவீனமானவர்களும் எதிரிகள் பலம் வாய்ந்தவர்களுமாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எமது சடலங்களைத் தாண்டியே அல்லாமல் உங்களை நெருங்க இயலாது. அவர்களின் முகமே அவர்கள் மனிதர்களல்ல. உயிருள்ள பிணங்கள் என்று கூறியது. அவர்கள் தங்கள் இருப்பால் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடைய கண்ணியம், அன்னாரின் மார்க்கம் ஆகியவற்றை நிறுத்த கடைசி முயற்சியும் செய்ய ஒன்றுகூடி இருந்தார்கள். பார்ப்பவர்கள் சிரித்தனர். பார்ப்பவர்கள் எள்ளிநகையாடினர். இம்மக்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று வியந்தனர்.

ஆகவே, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தம் முன்னால் உட்கார்ந்திருந்த சில ஆயிரம் பேரிடம் அக்காலத்தில் கூறினார்கள். அந்த 200–250 பேரின் அழுகை தான் இன்று நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பதாகும். அதாவது 200–250 பேரின் அழுகையின் விளைவால் தான் காதியானின் இந்த பரந்த மைதானத்தில் நீங்கள் கூடியிருக்கிறீர்கள். காதியானின் மாநாட்டுத் திடல் மிகவும் பரந்ததாகி விட்டது என்று இன்று நீங்கள் பார்க்கிறீர்கள். மாநாட்டில் கலந்து கொள்கிற அக்கம் பக்கத்திலுள்ள ஆண்கள் பெண்கள் ஆகியோரிடம் கூறுகிறேன். எல்லா வசதிகளுடனும் கூடிய இந்த பரந்த மைதானம் இருக்கிறது. அப்போது ஒரே மொழி தான். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பேசுவார்கள். இங்கு ஒன்றுக்கு பதில் பல மொழிகளில் குரல்கள் பரப்பப்படுகின்றன. இப்போது அங்கு அமர்ந்து குத்பாவும் கேட்கிறார்கள். 8–10 மொழிகளில் குத்பாவின் மொழிபெயர்ப்பும் சென்று சேர்கிறது. அங்கு இப்போது பல்வேறு நாட்டு மக்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். பாகிஸ்தானிலிருந்து தமது உரிமை பறிக்கப்பட்ட மக்கள் வந்திருக்கிறார்கள். இந்த அனைவரும் தமக்குள் ஈமான் மற்றும் மாசற்ற தூய்மையை உருவாக்குங்கள். அல்லாஹ்வுடன் தொடர்பை உருவாக்குங்கள். ஓர் உணர்வை உருவாக்குங்கள். அந்த 200 பேருடைய உதாரணத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தந்துள்ளார்கள். இந்த 200–250 விதைகள் அல்லது நாற்றுகள் தமது தாக்கத்தைக் காட்டி விட்டன. இன்று நமது பொறுப்பு உள்ளது. நாம் இப்பணியை மேலே எடுத்துச் செல்வதற்கு நமது ஈமானை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வின் வாக்குறுதி இருப்பது போன்றே நமது வெற்றியும் உள்ளது இன்ஷா அல்லாஹ்.

இன்று உலகின் மக்கள் தொகை 700 கோடியை விட அதிகமாகும். 730 கோடி என்று கூறப்படுகிறது. இப்போதும் கூட இன்றைய உலக மக்கள் தொகை மற்றும் வசதிகளுக்கு முன் நமது எண்ணிக்கை மிக மிக சாதாரணமானதாகும். ஆனால் நமது முன்னோர்கள் செய்த அதே பணியை நாமும் செய்ய வேண்டியதுள்ளது. ஆகவே இன்று ஒவ்வொரு அஹ்மதியும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். நமது இலக்கோ மிக அதிகமாகும். அதனைப் பெற வேண்டியதுள்ளது. காதியான் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். இந்நாட்களில் மிகவும் அதிகமாக துஆ செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அத்தகைய அடையாளங்கள் ஆயிரக்கணக்கானவையாகும். அவற்றின் சாட்சியங்களை நாம் மதிப்பிட முடியும். அவை தமது அழகைக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

ஒரு இல்ஹாமைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: யஃதிக மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக். யஃதூன மின் குல்லி ஃபஜ்ஜின் அமீக். அதாவது தொலை தூரத்திலிருந்து மக்கள் உன்னிடம் வருவார்கள். தொலை தூரத்திலிருந்து உன்னிடம் அன்பளிப்புகளைக் கொண்டு வருவார்கள். விருந்தோம்பலுக்குரிய பொருட்களை எடுத்து வருவார்கள். அதிக அளவில் மக்கள் வருவார்கள். அதனால் அவர்கள் வரும் பாதைகள் பள்ளமாகி விடும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது மகத்தான ஓர் அடையாளமாகும். இந்த மகத்தான அடையாளத்திற்குரிய செய்தியை இறைவன் எப்போது தந்தான்? அக்காலத்தைப் பார்த்தவர்கள் இப்போதும் இருக்கிறார்கள். அந்த இல்ஹாம் வந்த காலம் எவ்வாறிருந்தது? அதனைப் பார்த்தவர்கள் இப்போதும் இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது எனது வயது மிகவும் குறைவாகும். ஆனால் அந்தக் காட்சி எனக்கு இப்போதும் நினைவில் உள்ளது. மத்ரஸா இருக்கிற இடத்தில் அப்போது ஒரு பெரிய குட்டை இருந்தது. அதன் ஒரு பகுதியில் வைக்கோற் போர் இருந்தது. அந்த பகுதிக்கு மக்கள் இரவில் செல்லமாட்டார்கள். முதலில் போகவே மாட்டார்கள். அப்படியே போனாலும் தனியாகப் போகமாட்டார்கள். 2–3 பேர் சேர்ந்து தான் போவார்கள். அக்காலத்தில் எந்த வளர்ச்சியும் இருந்ததில்லை. அதுவும் ஒரு வகையில் வளர்ச்சிக்குரிய காலம் தான். அப்போது ஹாஃபிஸ் ஹாமித் அலி சாஹிப் வந்து விட்டார்கள். அதற்கும் முன்னால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஒருவரும் அறிந்திருக்கவில்லை. இறைவன் வாக்குறுதி வழங்கினான். உம்மிடம் மக்கள் தொலை தூரத்திலிருந்து வருவார்கள். தொலை தூரங்களிலிருந்து அன்பளிப்புகளைக் கொண்டு வருவார்கள். அக்காலத்தை மதிப்பிட்டவாறு அல்லாஹ்வின் இந்த வாக்குறுதியை இவ்வாறு கூறலாம். உமது வட்டாரத்தில் கூட யாரும் அறிந்திராத மனிதனே! உமது ஊரை விட்டு வெளியில் எந்த மனிதரும் அறிந்திரா மனிதனே! பெயர் தெரியாத அந்நிலையில் மனிதனது எண்ணமாவது மிர்ஸா குலாம் காதிர் என்ற ஒருவர் தான் அவரது தந்தைக்கு ஒரே மகன். இந்நிலையில் அல்லாஹ் கூறினான். நான் உன்னை (ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி –அலை– அவர்களை) பிரபலப்படுத்துவேன். உன்னை கண்ணியப்படுத்துவேன். கண்ணியம் உம்மை தேடி வரும். சிந்திக்க வேண்டிய இடமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து கேட்டுள்ளேன். அன்னார் கூறுவார்கள். சிந்தித்துப் பார்த்தால் காஃபிரும் ரஹ்மத் ஆகும். அபூஜஹில் இல்லையென்றால் இவ்வளவு குர்ஆன் ஏன் இறங்குகிறது? எல்லாரும் அபூபக்கராகவே ஆகி விட்டால் லாயிலாஹ இல்லல்லாஹ் மட்டுமே இறங்கி

இருக்கும். இதிலிருந்து தெரிய வருவது, எவர் அல்லாஹ்வுக்காக ஆகி விட்டாரோ அவருக்கு எல்லாமே நல்லதாகவே படுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிரிப்பு ஏற்பட்டது. கண்ணியம் இன்னும் அதிகமாகும் என்று அவர்களுக்கு தென்பட்டது. அதிகமாகிக் கொண்டே செல்லும். இப்போது காதியானின் காட்சியை நாம் பார்க்கிறோம். 20–25 நாடுகளில் இருந்து மக்கள் வந்துள்ளனர். புதிய புதிய கட்டடங்கள் அல்லாஹ்வின் அருளால் உருவாகின்றன.

பிறகு ஆண்டு மாநாட்டின் விருந்தோம்பல் சம்பந்தமாக ஓர் இல்ஹாமை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு நினைவில் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தின் கடைசி மாநாட்டை குறிப்பிடுகிறார்கள். அதில் மொத்தம் 700 பேர் இருந்தார்கள்.

ஏற்பாடுகள் எந்த அளவுக்கு சிக்கலாகி விட்டனவென்றால் இரவு 3.00 மணி வரை மக்களுக்கு சாப்பாடு கிடைக்கவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு, யாஅய்யுஹன்னபிய்யு அத்இமுல் ஜாய வல்முஃதஸ் – நபியே! பசி மற்றும் துயருற்றவருக்கு உணவளிப்பீராக! என்ற இல்ஹாம் வந்தது. இந்த வகையில் காலையில் தெரிய வந்தது. விருந்தாளிகள் இரவு 3.00 மணி வரை லங்கர்கானாவின் முன் நின்றார்கள். அப்போதும் அவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. பிறகு அன்னார் மீண்டும் புதியதாக பாத்திரத்தை ஏற்றி உணவு சமைத்து வழங்குமாறு கூறினார்கள்.

ஆக, ஒரு நேரத்தில் 700 பேருக்கு உணவு வழங்குவது கூட சிரமமாகி விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தாமே நின்று ஏற்பாடு செய்தார்கள். கை குலுக்குவது சிரமமாகி விட்டது. இன்று அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இறை உதவிகளின் காட்சிகளைப் பார்க்கிறோம். பல்வேறு சமுதாயத்தின் ஆயிரக்கணக்கான மக்கள் காதியானில் ஒன்றுகூடியிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவும் சமைக்கப்படுகிறது. அவர்களுக்கு ஏற்ற வகையில் விருந்தோம்பல் நடைபெறுகிறது. உலகின் பிற பகுதிகளின் மாநாட்டிலும் இவ்வாறு தான் நடைபெறுகிறது.

இது அல்லாஹ்வின் உதவி ஒத்தாசையின் மகத்தான அடையாளமாகும். ஒரு ஜமாஅத்துடன் அவனது உதவி கிடைக்கும் போது அது இவ்வாறு வளர்கிறது. பிறகு அது எதிரிகளின் கண்களின் முள்ளாக குத்துகிறது. எதிரிகள் பகைமையில் வளர்கிறார்கள். பொறாமையில் வளர்கிறார்கள். ஆனால் இறைவனின் தக்தீர் முழுமை அடையாமல் இருப்பதில்லை. எதிரிகளின் பொறாமைப் பார்வை இருந்த போதிலும் இறைவன் தனது ஜமாஅத்தை வளர்த்துக் கொண்டே செல்கிறான். அதற்கு உலகில் முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டே செல்கிறான். இது நமது மகிழ்ச்சிக்குக் காரணமானது என்பதில் ஐயமில்லை. அத்துடன் இது நம்மை நமது பொறுப்புகளின் பக்கமும் கவனமூட்டுகிறது. நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த அந்த நோக்கத்தின் பக்கம் நம்மை கவனமூட்டுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஓர் இல்ஹாம் அதற்கு இரு பொருள்கள் உள்ளன. நாம் இதற்கு குறிப்பாக எந்தப் பொருளும் தர இயலாது. இல்ஹாமாவது, லங்கர் உட்டாதோ – உணவை, சமையலை எடுத்து விடு. இந்த 'லங்கர்' என்ற சொல்லுக்கு கப்பலிலுள்ள நங்கூரம் என்ற பொருள் எடுத்துக் கொண்டால் கப்பல் தண்ணீர் நிற்பதற்காக நங்கூரம் பதிக்கப்படுகிறது. அதன்படி பொருள் கொண்டால் வெளியே செல்லுங்கள். இறைவனது செய்தியை எல்லா இடங்களிலும் பரப்புங்கள் என்று பொருள்படும். 'லங்கர்' என்ற சொல்லுக்கு வெளிப்படையான சமையல் ஏற்பாடு என்று பொருள் கொண்டால், பிறகு அதற்கு இவ்வாறு அர்த்தம் வரும். உம்மிடம் வருபவரது எண்ணிக்கை அதிகமாகி விட்டால் இப்போது விருந்தோம்பல் ஏற்பாடு செய்ய முடியாது. எனவே சமையல் – உணவு ஏற்பாடுகளை எடுத்து விடுங்கள் என்று பொருள்படும். வருபவர்களிடம் தங்குமிடம் உணவு ஆகியவற்றிற்கு தாமே ஏற்பாடு செய்து கொள்ளுமாறு கூறி விடுங்கள். இந்த இரு பொருள்களில் நாம் எதனையும் நிர்ணயித்து கூற முடியாது. அல்லது இந்த நேரத்தில் நடக்கும் என்று காலத்தை நிர்ணயித்துக் கூறவும் முடியாது. எதுவரை விருந்தினர்களை தங்க வைக்க மனித சக்தி இடம் தருமோ அதுவரை நமக்கு உரிய வழிகாட்டல் வஸ்ஸிஃ மகானக்க – உமது இடங்களை விரிவுபடுத்திக் கொண்டே செல்லுங்கள் என்பதாகும். விருந்தினர்களுக்காக இடங்களை ஏற்படுத்திக் கொடுங்கள். இதற்காக குறைந்தபட்சம் காதியானில் மற்றும் எங்கெல்லாம் செய்ய முடியுமோ அங்கெல்லாம் தற்காலிக மற்றும் நிரந்தர தங்குமிடங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாமாகிய வஸ்ஸிஃ மகானக்க –வின் கீழ் நமது கட்டடங்கள் விரிவாக்கம் பெறுகின்றன. புதிய புதிய விருந்தினர் இல்லங்கள் கட்டடங்கள் உருவாகி விருந்தாளிகளுக்கு எவ்வளவு வசதிகள் செய்து தர முடியுமோ செய்து தரப்படுகிறது. எவ்வாறிருப்பினும் வீடு மாதிரி வசதி செய்து தந்து விட முடியாது தான். விருந்தாளிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வளவு வசதிகள் செய்து தரப்படுகிறதோ அதற்குள் இருந்தவாறு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவாறு மாநாட்டிற்கு வந்ததன் அசல் நோக்கத்தை நிறைவேற்றுங்கள். விருந்தோம்பல், தங்குமிட வசதிகளைப் பார்க்க வேண்டாம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நமது ஜமாஅத்தின் பெரும் பகுதி இந்தியாவில் வசிப்பவர்கள் ஆவர். அதாவது அக்காலத்தில் பாகிஸ்தான் இந்தியா சேர்ந்திருந்தது. அவற்றில் பெரும்பாலார் ஆண்டு மாநாட்டின் போது காதியான் வந்து சேர முடியும். ஆகவே இந்த நாட்களில் காதியான் வருவதை ஏதாவது காரணத்தை சொல்லி வராமல் இருப்பது அக்காரணத்தை முறிக்கவோ நிவாரணம் செய்யவோ முடியும் நிலையில் அதனை செய்யாமல் இருப்பது வெறும் கட்டளைக்கு கட்டுப்படாமை மட்டுமின்றி தமது சந்ததிகளுக்கு செய்யும் அநீதியும் ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கட்டளை மாநாட்டிற்கு வர வேண்டும் என்பதாகும். இதற்கு கட்டுப்படாமல் போவது மட்டுமின்றி சந்ததிகளுக்கும் கூட அவர்கள் அநீதியிழைக்கின்றனர். குறிப்பாக இந்திய அஹ்மதிகள் முயற்சி செய்து மாநாட்டிற்கு வர வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அமெரிக்காவில் எவ்வாறிருப்பினம் செல்வந்தர்கள் இருப்பர். அவர்கள் பயணச் செலவு செய்ய முடியும் எனில் ஹஜ் தவிர அவர் தமது வாழ்நாளில் ஓரிருமுறை காதியான் மாநாட்டிற்கு வந்து செல்வது அவசியமாகும். ஏனெனில் காதியான் அறிவு ரீதியான பரக்கத்துகள் கிடைக்கின்றன. தலைமையகத்தின் அருளிலிருந்து மக்கள் பலன் பெறுகின்றனர். அங்கு கிலாஃபத் இல்லா விட்டாலும் கூட அங்கு ஓர் ஆன்மீக தாக்கம் உள்ளது. செல்வதனால் அதனை உணர முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உறுதி கொள்கிறேன். ஒருநாள் வரவிருக்கிறது. தூரத்திலிருந்து மக்கள் இங்கு வருவார்கள். இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கனவு பார்க்கிறார்கள். காற்றில் நீந்துகிறார்கள். ஹஸ்ரத் ஈஸா தண்ணீரில் நடந்தார்கள். நான் காற்றில் நீந்துகிறேன். அவரை விட அதிகமாக இறைவனது அருள் என் மீது இருக்கிறது. இந்த அன்னாரது கனவைப் பாருங்கள். இதன் அடிப்படையில் அக்காலம் வரவிருக்கிறது என்றே கருதுகிறேன். இவ்வாறு காதியான் மாநாட்டிற்கு குதிரை வண்டியில் வந்தார்கள். பிறகு மோட்டார் வண்டிகள் வந்து பாதையை பள்ளமாக்கியது. பிறகு இரயில் வாகனம் மக்களை இழுத்து வந்து காதியானில் சேர்க்கிறது. இவ்வாறு ஏதாவது ஒரு காலத்தில் காதியான் மாநாட்டு நாட்களில் சிறிது காலத்திலேயே அந்த செய்திகள் வந்து சேரும். இன்னின்ன நாட்டிலிருந்த இத்தனை விமானங்கள் வந்துள்ளன என்ற செய்திகள் வரும். உலகின் பார்வையில் இவ்விஷயங்கள் வியப்பிற்குரியனவாக தோன்றலாம். ஆனால் இறைவனது பார்வையில் வியக்கத்தக்கதன்று.

அல்லாஹ்வின் அருளால் இந்தக் காட்சியை நாம் அதிக அளவில் பார்க்கிறோம். நான் ஏற்கனவே கூறியது போன்று உலகின் **20–25** நாடுகளிலிருந்து விமானங்கள் மூலமாகவே மக்கள் காதியான் மாநாட்டிற்குச் சென்றுள்ளார். சில நாடுகளின் உள்ளூர் மக்கள் அவர்களால் அங்கு செல்வோம் என்று கற்பனை கூட செய்திருக்க மாட்டார்கள். ஏதாவது ஒரு காலத்தில் செயற்கைக்கோள் மூலமாக கூட மாநாட்டிற்குச் செல்லும் காலமும் தொலைவில் இல்லை. அதில் வந்து மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் தீர்ப்பு இதுவாகும். தனது மார்க்கத்திற்காக மக்கா மற்றும் மதீனாவிற்குப் பிறகு காதியானை தலைமையகமாக ஆக்க விரும்பியுள்ளான். மக்கா மதீனா இரண்டும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் தொடர்புடையவை. அன்னார் இஸ்லாத்தின் நிறுவனரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எஜமானரும் அன்னாரின் ஆசிரியரும் ஆவார்கள். இந்த அடிப்படையில் அவ்விரு இடங்களும் காதியானை விட மேன்மை பொருந்தியவையாகும். ஆனால் மக்கா மதீனாவுக்குப் பிறகு ஓரிடத்தில் உலகின் நேர்வழியின் தலைமையகமாக ஆக்கினான் என்றால் அது ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களது நிழலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இடமும் ஆகும். அதுவே இப்போது மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்யும் ஒரே தலைமையகமாகும். நான் மிகவும் ஆதங்களுடன் கூற வேண்டியது வருகிறது. மக்கா மதீனா இரண்டும் ஒரு காலத்தில் அருளுக்குரிய இடமாக இருந்தும் தப்லீகின் தலைமை இடமாகவும் இருந்தும் இப்போது அங்கு வசிப்போர் தமது அக்கடமையை மறந்து விட்டனர். ஆனால் இந்நிலை எப்போதும் இருக்காது. எனக்கு உறுதி உள்ளது. அல்லாஹ் இப்பகுதிகளை மட்டும் அன்றி அரபு நாடுகளிலும் அஹ்மதிய்யத்தை நிலைநாட்டுவான். பிறகு அந்த தூய இடங்களான மக்கா மதீனா தமது அசல் மகிமை மகத்துவத்திற்கு திரும்பும். இது ஒரு யோசிக்கத்தக்க போதனையாகும். காதியானிலிருந்து கேட்பவர்கள் மாநாட்டிற்குச் செல்பவர்கள் மற்றும் பிற இடங்களிலிருந்து கேட்பவர்கள் அனைவரும் இறைவனுக்கு நன்றி செலுத்திய பிறகு இங்கு ஒன்றுகூடியுள்ள எல்லா நண்பர்களுக்கும் அறிவுரை கூறுகிறேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த விஷயம் மகிழ்ச்சிக்குக் காரணமானதாக இருக்குமோ அதில் சிரமமும் இருக்கிறது. மலர் இருக்கும் இடத்தில் முள்ளும் இருக்கிறது. அதுபோன்று முன்னேற்றம் இருக்கும் இடத்தில் பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் இருக்கிறது. வளர்ச்சிக்குப் பிறகு சரிவும் வருகிறது.

பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: காதியான் வருபவர்களுக்கு நான் அறிவுரை கூறுகிறேன். மாநாட்டிற்கு வருபவர்கள் கூட்ட நெரிசல், பணி செய்பவர்களின் குறைவு ஆகியவற்றின் காரணமாக ஏதாவது சிரமம் ஏற்பட்டால் சங்கடப்பட வேண்டாம். தடுமாறி விட வேண்டாம். எங்கு மாநாடு நடந்தாலும் சரி இந்த அறிவுரையை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எவ்வாறிருப்பினும், விருந்தோம்பல் செய்பவர் எல்லா வகையிலும் உபசரிப்பதற்காக முயற்சி செய்கிறார் என்றாலும் சில குறைபாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. நான் ஏற்கனவே கூறியது போன்று இன்றும் காதியான் வருபவராக இருப்பினும் அல்லது வேறு எங்கு மாநாட்டுக்கு செல்பவராக இருந்தாலும் நினைவில் கொள்ளுங்கள். ஏற்பாடுகள் ரீதியாக ஏதாவது சிரமம் ஏற்பட்டால் மகிழ்ச்சியுடன் சகித்துக் கொள்ளுங்கள். அதனை உங்கள் ஈமானில் தடுமாற்றம் ஏற்படக் காரணமாக்கி விடாதீர்கள். அல்லாஹ் காதியான் மாநாட்டையும் பிற மாநாட்டையும் தனது பரக்கத்துகளால் எல்லா நாட்களையும் கழியச் செய்வானாக! எல்லா ஏற்பாடுகளையும் செய்வானாக! ஒவ்வொரு மாநாடும் அல்லாஹ்வின் அருளை பெறுவதாக இருக்கட்டுமாக! மாநாட்டில் கலந்து கொள்வோர் அனைவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆக்கு வாரிசாவோமாக! நீங்களும் இந்நாட்களில் துஆ செய்யுங்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 25.12.2015
Tamil Translation : Muallim. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516